# கண்ணிவெடி கவனம்
## Mind the mines

**கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்**

இலங்கை அரசாங்கம், யுனிசெப் (UNICEF), ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான உதவிப் பிரிவு (ECHO), ஸ்பெயின் அரசாங்கம் என்பன இன்டர்நியூஸ் நிறுவனத்துடன் இணைந்து நடத்தை ரீதியிலான மாற்றங்களை உண்டுபண்ணுவதன் மூலம் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்கள் என்பன தொடர்பான உங்களது விழிப்புணர்வை அதிகரிக்கும் பொருட்டும் அத்தகைய பொருட்களிலிருந்து உண்டாகக்கூடிய அனர்த்தங்கள், காயங்கள் என்பனவற்றை குறைக்கும் பொருட்டும் 'கண்ணிவெடி கவனம்' (Mind the mines) என்ற தலைப்பில் கண்ணிவெடி அபாய கல்வியூட்டல் பிரச்சாரத்தை மேற்கொள்கிறது.

இலங்கையின் யுத்தம் நடைபெற்ற பகுதிகளில் சுமார் 1.5 மில்லியன் மிதிவெடிகளும் வெடிக்காத பொருட்களும் சுமார் 40 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் பரவிக் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

'விழிப்போடு இருப்போம் , வருமுன் காப்போம்'

இந்தப் பரப்புரைத் திட்டம் உங்களிடம் இருந்தும் கருத்துகளை எதிர்பார்க்கின்றது. கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வுத் திட்டம் எவ்வாறு உங்கள் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்பது குறித்து எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

ஆசிரியர்
மீண்டும் வாழ்வோம்
த.பெ. இல:1039, கொழும்பு

## பொறி வெடி குறித்து எச்சரிக்கையாக இருங்கள்!



பொறி வெடியானது மக்களை பாதிப்புக்குள்ளாக்கும். அநேகமாக எந்தப் பொருளும் பொறி வெடியாக உருவாக்கப்பட்டிருக்கலாம். ஆகவே உங்களுக்கு பரிச்சயமில்லாத சூழலில் காணக்கிடைக்கும் பொருட்கள் ஆபத்தற்றவை என உறுதிப்படுத்தும் வரை அவற்றை தொடாமலிருங்கள். அது பொறி வெடியாகவும் இருக்கலாம். அப்பொருள் சந்தேகத்துக்கிடமானதாக இருந்தால் அதனைத் தொடுவதைத் தவிர்த்துவிடுங்கள்.



## யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வெடிக்காத வெடிபொருட்களைத் தொடாதீர்கள்!



கண்ணிவெடிகளையும் வெடிபொருட்களையும் சந்தேகத்திற்கிடமான பொருட்களையும் தொடுவதையோ அதனை அண்மித்து செல்வதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள். ஏனெனில், அவை வெடிக்கக் கூடியவை. அவற்றைத் தொடுவதைத் தவிருங்கள்!

அனைத்து வகையான வெடிபொருட்களும் மிகவும் சக்தி வாய்ந்தவை. பெரியளவில் பாதிப்பையும், காயங்களையும் அல்லது உயிர் சேதங்களையும் ஏற்படுத்தக் கூடியது. எப்போதும் அவதானமாக இருங்கள்!



**போரின் போது எஞ்சிய வெடிபொருட்கள் மிகவும் ஆபத்தானவை, நீங்கள் முதல் தடவை தொட்ட உடனேயே வெடிக்காமலிருப்பதால் அவை ஆபத்தற்றவையல்ல**













**ஆபத்தான பிரதேசங்கள்**

**சந்தேகத்திற்கிடமான பொருட்களைக் கண்டால் பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு அறிவிப்போம்.**

| வவுனியா மாவட்டம் | மன்னார் மாவட்டம் |
|---|---|
| CTF: 024 222 1127 | CTF: 023 222 2501 |
| DMAO: 024 222 4214 | DMAO: 023 222 2235 |
| SLA: 011 306 1231 | SLA: 011 306 1231 |
| MAG: 024 3243451 | MAG: 023 224 3451 |
| Sarvatra: 024 492 0206 | Sarvatra: 024 492 0206 |
| Horizon: 024 224 8150 | Horizon: 023 223 3055 |

FSD: 024 458 9059 / 024 222 0052 / 024 324 5737

| | |
|---|---|
| DDG: 024 324 8214 | யாழ்ப்பாணம் மாவட்டம் The HALO Trust: 021 320 5339 |
| UNICEF: 024 222 3485 | |

தங்கள் பகுதியிலுள்ள
கிராம சேவை அலுவலர், பாதுகாப்புப் படையினர்
ஆகியோருக்கும் தெரியப்படுத்துங்கள்

## 'கண்ணிவெடிகள் குறித்த அபாயம் உள்ள பகுதிகள் மற்றும் அபாயமற்ற பகுதிகளை இனங்கண்டு அறிக்கையிடுகின்றோம்'

சுவிஸ் கண்ணிவெடியகற்றும் அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட பணிப்பாளர் **நைஜல் ரொபின்சன்** வடக்கில் இடம்பெற்று வரும் கண்ணிவெடியகற்றும் பணிகள் குறித்து 'மீண்டும் வாழ்வோம்' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணல்.

**கண்ணிவெடி அகற்றல் தொடர்பாக வடக்கில் FSDயினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் குறித்துக் கூற முடியுமா?**

கண்ணிவெடியகற்றும் பணியில் 300 உள்நாட்டுப் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மன்னார் தானியக்களஞ்சியப்பகுதியிலும் மடு ஆலயத்தையண்டிய பகுதியிலும் கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிபொருட்களை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். இதன் மூலம் மீளக் குடியமர்த்தப்படுவோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடியதாக இருக்கும்

**கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றீர்கள்?**

கண்ணிவெடிகளை அகற்றும் நிபுணர் குழு மற்றும் தொழில்நுட்ப இயந்திரங்கள் மூலம் நாம் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தி வருகின்றோம். இது தவிர கண்ணிவெடிகள் குறித்த அபாயம் உள்ள பகுதிகள் மற்றும் அபாயமற்ற பகுதிகளை இனங்கண்டு அறிக்கையிடுகின்றோம். இதேவேளை கிணற்றை அண்டிய பகுதிகளில் புதைக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகள் மற்றும் வெடிக்காத வெடிப்பொருட்களை அகற்றும் பணிகளையும் முன்னெடுத்து வருகின்றோம்.



# கண்ணிவெடி கவனம்
Mind the mines

கண்ணிவெடிகள் குறித்து விழிப்புடன் இருங்கள்

## கண்ணிவெடி தொடர்பான கார்டகெனா மாநாடும் எதிர்கொண்டுள்ள சவால்களும்



படம் : The HALO Trust

நிலக்கண்ணிவெடிகளற்ற உலகம் தொடர்பாக அண்மையில் கொலம்பியாவில் நடைபெற்ற கார்டகெனா மாநாட்டில் மனிதர்களுக்கெதிரான நிலக்கண்ணிவெடிகளின் தடுப்பு மீதான உடன்படிக்கையில் நிலக்கண்ணிவெடிகளை அகற்றுதல், அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுதல் மற்றும் எஞ்சியுள்ள சகல கண்ணிவெடிகளையும் அழித்தல் என்பவற்றுக்கான ஐந்தாண்டு செயற்றிட்டமொன்று முன்வைக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு மார்ச் 01ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்ட ஒட்டாவா உடன்படிக்கையின் 10 ஆண்டு காலப் பூர்த்தியை முன்னிட்டு கொலம்பியாவில் கார்டகெனா மாநாடு அண்மையில் நடந்தது. உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள 156 நாடுகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டன.

இந்த உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டு 10 வருடங்கள் கடந்த பின்னரும் நிலக்கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டு உயிர் தப்பியுள்ளவர்களில் பெரும்பாலானவர்களின் நம்பிக்கையைப் பூர்த்தி செய்ய இச்சமவாயம் தவறியுள்ளது என இந்த மாநாட்டில் கலந்துகொண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உப தலைவர் கிறிஸ்டின் பீர்வி தெரிவித்துள்ளார்.

**கடந்த ஒரு தசாப்தத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**




கடந்த ஒரு தசாப்தத்தில் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளுக்கு 4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, உலகளாவிய ரீதியில் 44 மில்லியன் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டில் பிரெஸல்ஸில் 160 சதுர கிலோ மீற்றர் பரப்பில் கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா இந்த ஒப்பந்தத்தில் இதுவரை கைச்சாத்திடவில்லை. கண்ணிவெடி தொடர்பாக அந்நாட்டில் நடைமுறையிலுள்ள சட்ட விதிகளை மீள் பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஆகவே, அமெரிக்க பிரதிநிதிகள் சிலர் இந்த மாநாட்டில் அவதானிகளாகக் கலந்துகொண்டனர்.

இதேவேளை, கொலம்பியா, ஆப்கானிஸ்தான், ஈராக் அரசாங்கங்கள் கண்ணிவெடி தொடர்பாக தற்போது அமுலிலுள்ள சட்ட விதிகளில் திருத்தங்களை மேற்கொண்டு வருகின்றன. இதன் மூலம் கண்ணிவெடிகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கு சுகாதார வசதிகள் மற்றும் புனர்வாழ்வளித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்படவுள்ளதாக இந்த நாடுகள் தெரிவித்துள்ளன.

கொலம்பியா, மியன்மார் மற்றும் இலங்கை போன்ற நாடுகளில் அதிகளவான கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. அவற்றை அப்புறப்படுத்துவதில் பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக மாநாட்டில் சுட்டிக்காட்டப்பட்டது.

ஒட்டாவா உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள 40 நாடுகள் இதுவரை கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பில் தமது உறுதிமொழியை நிறைவேற்றவில்லையென தெரிவிக்கப்படுகின்றது. 12ற்கும் அதிகமான நாடுகள் கண்ணிவெடி தொடர்பாக அளிக்கப்பட்ட உறுதிமொழியை நிறைவேற்றுவதற்கு கால அவகாசம் கோரியுள்ளன. இதேவேளை, கொங்கோ குடியரசு, மொசம்பியா, உகண்டா போன்ற நாடுகள் கண்ணிவெடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்குத் தவறியுள்ளதாகவும் மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

### மீண்டும் வாழ்வோம் உங்களுக்கான தகவல் ஊடகம்

உங்கள் வாழ்நிலையை மேம்படுத்தக் கூடிய மனிதாபிமானப் பணிகள் தொடர்பான செய்திகளை ''மீண்டும் வாழ்வோம்'' வாராந்தத் தகவல் இதழ் உங்கள் நலன்பொருட்டு இலவசமாக வெளியிடுகிறது.

'மீண்டும் வாழ்வோம்'' வானொலி நிகழ்ச்சி இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தேசிய
சேவையில் திங்கள் முதல் வெள்ளிவரை இரவு 9.30 முதல் 10.00 மணி வரையும் கிழக்கு மாகாணத்தில் பிறை எப்.எம்.வானொலியில் ஞாயிற்றுக் கிழமைகளில் பிற்பகல் 1.30 மணி முதல் 2.00 மணிவரையும் ஒலிபரப்பாகிறது.

- **''மீண்டும் வாழ்வோம்'' தகவல் இதழ் உங்கள் பிரதேசத்தில் கிடைப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா?**
- **எமது செய்தி ஊடகத்துக்குப் பங்களிக்க விரும்புகிறீர்களா?**
- **எவ்விதமான தகவல்கள் இடம்பெற வேண்டுமென விரும்புகிறீர்கள்?**
- **உங்களது அபிப்பிராயங்களை எமக்கு எழுதுங்கள்...**

முகவரி: மீண்டும் வாழ்வோம்
த.பெ. இல:1039, கொழும்பு

## கண்ணிவெடிகளின் உருவத்தோற்றம்





படம் : The HALO Trust

**ஐக்கிய நாடுகளின் சிறுவர்களுக்கான நிதியத்தில் கண்ணிவெடி அபாயக் கல்வியின் திட்ட உதவியாளராக கடமையாற்றும் மிஹிலார் மொஹமட் கண்ணிவெடிகள் எவ்வாறு தோற்றமளிக்கும் என்பது குறித்துத் தெரிவிக்கின்றார்.**

பொதுவாக கண்ணிவெடிகள் எப்போதும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அல்லது உருமாற்றப்பட்ட நிலையில் அதனுடைய சூழலுக்கு அமைவாகக் காணப்படும். அதிகமான சந்தர்ப்பங்களில் நிலத்திற்கு அடியில் புதைக்கப்பட்டிருக்கலாம். இவை மரம், பிளாஸ்ரிக், இரும்பாலான பொருட்கள் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கலாம். பல நிறங்களிலும் இவை காணப்படுகின்றன. பச்சை, கறுப்பு, மண் நிறம், ஒலிவு நிறம் ஆகியவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கும். உருளை, செவ்வகம், வட்டம், சதுரம் போன்ற வடிவங்களாலும் இவை ஆக்



**பாதிக்கப்பட்ட சிறுவர்களை புறந்தள்ளாமல்**
**உங்களுடன் சேர்த்து விளையாடுங்கள்,**
**அவர்களுக்கு உங்கள் அன்பை வெளிப்படுத்துங்கள்.**